**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 31/2025**
**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. கார்த்திகா** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **திரு. சந்தனக்குமார்** | **Calling** | : | **கேபிள் டிவி கலெக்சன்** |
| **Village** | : | **மொட்டணம்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **38** |
| | | | **Dated** | : | **11.09.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 5), **திருமதி. கார்த்திகா** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கேபிள் டிவி கலெக்சன் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் என் தாய்மாமா மகன். 23.05.2024ம் தேதி மாலை சுமார் 04.30 மணி அளவில் நான் என் அக்கா சுபாஷினி வீட்டில் இருந்தேன். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்து, என் மாமா நீலகண்டனை எதிரி கத்தியால் குத்திக் கொண்டு இருக்கிறார் என்று சொல்லவும், நானும், என் அக்காவும், என் அக்கா பையன் ஷரயாஸ் அனைவரும் அங்கு போய் பார்த்தோம். அப்பொழுது எதிரி என் மாமா நீலகண்டனை செத்துப்போ, செத்துப்போ என்று சொல்லி கத்தியால் குத்தினார். என் மாமாவுக்கு தலை, கண்ணுக்கு கீழே முகத்தில், வலது பக்க நெஞ்சு, இடது பக்க தோள்பட்டை, மேல் வயிறு, வலைது கை மற்றும் முதுகு ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டது. என் மாமா சரிந்து

விழுந்துவிட்டார். எதிரி தன்னுடைய அலைபேசியில் யாருக்கோ போன் போட்டு அம்மாவும், தாத்தாவும் சொன்னதுபோல், ஆளை முடித்துவிட்டேன் என்று சொன்னார். சம்பவ இடத்திற்கு அப்போது போலீசார் வந்துவிட்டனார். தன் கையில் வைத்து இருந்த இரண்டு கத்திகளையும் போலீசிடம் கொடுத்துவிட்டு, போலீஸ் ஜீப்பில் ஏறி எதிரி உட்கார்ந்து கொண்டார். 108 ஆம்புலன்ஸ் வைத்து என் மாமாவை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். புகார் யார் கொடுத்தது என்று தெரியாது. அதில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலீசார் எழுதப்படாத வெள்ளைத்தாளில் தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். **மேற்படி கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை மருத்துவமனையில் இருக்கும்போது விசாரித்தார்கள். மருத்துவமனையில் இருக்கும் பொழுது என் மாமாவை, நான் பின்னால் பெயர் கேட்டு விசாரித்து தெரிந்து கொண்ட சுமார் 20 வயது மதிக்கத்தக்க காயத்திரி என்ற பெண்ணும், ஒரு பையனும் வந்து பார்த்தார்கள். நீ இன்னும் சாகவில்லையா, உயிருடன் தான் இருக்கிறயா என்று கேட்டார்கள். பிறகு நான் விசாரித்தபோது அந்த பெண் காயத்திரி, என் மாமா நீலகண்டனுடைய மகள் என்று தெரிய வந்தது. இதைப் பற்றி போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

அசா. 1 சுபாஷினி எனது அக்கா, அசா. 2 நீலகண்டன் என் தாய்மாமா ஆவார். நான் முதல் விசாரணையில் சொன்னதைத்தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நீலகண்டனுக்கும், அவரது மனைவி கலாராணிக்கும் ஜீவனாம்ச வழக்கு இதே நீதிமன்றத்தில் நடைபெற்று வருவது, எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். கடந்த 10 ஆண்டுகளாக கலாராணிக்கு, நீலகண்டன் ஜீவனாம்சம் கொடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஜீவனாம்ச வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்பதற்காக எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. நீலகண்டனுக்கு பல பெண்களோடு தொடர்பு இருப்பதால், அவருக்கு முன் விரோதம் நிறைய உள்ளது என்றால் சரிதான்.

நான்  சொன்னது போல், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.   சம்பவ இடத்தில் இருந்த நபர்களை பற்றி எனக்கு தெரியுமா என்றால் அங்கு நிறைய பேர் நின்று கொண்டு இருந்தார்கள். இருசக்கர வாகனத்தில் என் மாமா வேகமாக சென்று கூர்மையான பொருட்கள் மீது விழுந்ததால் என் மாமாவுக்கு மேற்படி காயங்கள் ஏற்பட்டன என்றால் சரியல்ல.  அசா. 1 முதல் அசா. 3

வரையிலானவர்கள் சொன்னதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.  நான் சொன்னது போல் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 11.09.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..)Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.